**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 111/2021**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இசக்கித்துரை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இசக்கி | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | கிருஷ்ணாபுரம் | வயது | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 08th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு காவல்நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 24.07.2019 ம் தேதி, 12.00 மணிக்கு எதிரி முத்து என்பவரை போலீசார் என் முன்பும், கோட்டூர்சாமி

முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தனக்கு முதுகுக்கு பின்னால் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பின்னர், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் அரிவாளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை போலீசார் கிருஷ்ணாபுரம் ஆஞ்சநேயர் கோவில் பக்கம் வைத்து அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், கோட்டூர்சாமி என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J
CHRISTAL BABITHA
Date: 2025.10.09
11:16:12 +0530